# தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை. 6

**ந.க. எண் : 005/பகஇ/இ1//2019 நாள் 18.12.2019**

பொருள் : பள்ளிக் கல்வி – கனமழை காரணமாக பள்ளிக் கட்டடங்கள், கழிவறைகள், சுற்றுச் சுவர்கள் மற்றும் தளவாடப் பொருட்கள் குறித்த சேதமடைந்தது – சார்ந்து.

பார்வை :
1. நாளிதழ் செய்தி நாள். 18.12.2019
2. Engineer-in-Chief(Buildings) CE (Buildings), Chepauk, Chennai lr.No.AEE/T9/8595/07/Daed.11.7.2019

***************

பார்வையில் 1ல் உள்ள நாளிதழில் தேனி மாவட்டம், மயிலாடும்பாறை அரசு நடுநிலைப் பள்ளி வளாகத்தில் உள்ள சமையலறை கட்டடம் புதியதாக கட்டப்பட்ட பிறகு பழைய சமயலறை கட்டடம் இடித்து அகற்றப்படாமல் இருந்துள்ளது என தெரிவித்து, கடந்த சில நாட்களாக பெய்த கனமழையால் அந்த கட்டிடம் மேலும் சேதமமைந்தது. 17.12.2019 அன்று மதிய உணவு இடைவேளையின் போது பள்ளி மாணவர்கள் விளையாடிக் கொண்டிந்தபோது திடீரென சமையலறை கட்டடம் இடிந்து விழுந்ததது எனவும் இதில் மாணவர்கள் அதிஷ்டவசமாக சிறு காயங்களுடன் தப்பினர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வை 2ல் உள்ள கடிதத்தில் தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்) அவர்கள் பள்ளி வளாகத்தில் மீதம் உள்ள சில பழுதடைந்த கட்டடங்கள் 31.10.2019 க்குள் இடிக்கப்படும் என தெரிவித்துள்ளார். எனவே அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் தங்கள் மாவட்டத்தில் உள்ள பொதுப்பணித் துறையினரை தொடர்ப்பு கொண்டு தங்கள் மாவட்டத்தில் உள்ள பள்ளியில் இடிக்கப்பட வேண்டிய நிலையில் உள்ள கட்டடங்கள் இடிக்கப்பட்டு விட்டதை உறுதி செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும் வகுப்பறை, சுற்றுச்சுவர் மற்றும் கழிவறைகளைச் சுற்றித் தண்ணீர் தேங்கி இருந்தால் உடனடியாக அதனைத் அகற்றுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க அறிவுறுத்த வேண்டும்.

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் மேற்கண்ட அறிவுரைகளை அரசு/ அரசு உதவி பெறும் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கும் சுற்றறிக்கையாக அனுப்பி மேற்கூறிய அறிவுரைகளை தவறாது பின்பற்றுமாறு அறிவுறுத்த கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பள்ளிக் கல்வி இயக்குநர்

பெறுநர்
அனைத்து முதன்மை கல்வி அலுவலர்கள்